

கொரோனா பரவல் அச்சத்தையொட்டி இன்று சென்னை மெட்ரோ ரெயிலில் பயணிகள் முகக்கவசம் அணிந்து குறைந்த அளவில் பயணம் செய்த காட்சி.

### மாஸ்க் அணியாதவர்களுக்கு ரூ.200 அபராதம்:

# 52 மெட்ரோ ரெயில்களில் 10 குழுக்கள் அதிரடி வேட்டை

## பயணத்தின்போது கேமிரா மூலமும் கண்காணிப்பு

சென்னை, ஏப். 11–

தமிழகம் முழுவதும் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருவதை அடுத்து முகக்கவசம் அணி யாதவர் களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

**மெட்ரோ ரெயில்**

சென்னையில் மெட்ரோ ரெ யில்களில் முகக்கவசம் இன்றி பயணம் செய்தால் ரூ.200 அபராதம் விதிக்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் சார்பில் நேற்று அறிவிக்கப்பட்டது. இது இன்று உடனடியாக அமல் படுத்தப்பட்டது .

சென்னையில் அனைத்து மெட்ரோ ரெயில் வழித் தடங்களிலும் முகக் கவ சம் அணியாதவர்களை பிடிக்க சிறப்பு குழுக்கள் களம் இறங்கி உள்ளன.

**52 ரெயில்கள்**

சென்னையில் மெட்ரோ வழித் தடங் களில் 52 ரெயில்கள் இயக்கப் படுகிறது. இந்த ரெயில்கள் அனைத் திலும் 10 சிறப்பு குழுக்களை சேர்ந்த வர்கள் இன்று அதிரடி வேட்டையில் ஈடுபட்டனர்.

ரெயில் நிலைய நுழைவு வா யில்களில் பணிபுரியும் ஊழியர்கள், மாஸ்க் அணியாத பயணிகளை ரெயில் நிலையத்துக்குள் அனுமதிக்கவில்லை. முகக்கவசம் இன்றி வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

**ரெயில் பயணத்தில்**

ரெயில் நிலையத்துக்குள் முகக் கவசத்தோடு வரும் பயணிகள் ரெயில் பயணத்தின்போதும் முகக் கவசம் அணிந்துள்ளார்களா? என்பதையும் மெட்ரோ ரெயில் நிர்வாகத்தினர் கண்காணித்தனர்.

அனைத்து ரெயில் பெட்டிகளிலும் கண் காணிப்பு கேமிராக்கள் பொறுத் தப்பட்டுள்ளன. இந்த கேமிராக்கள் மூலமாக முகக்கவசம் அணியாமல் பயணம் செய்த பயணிகள் கண்டுபிடிக் கப்பட்டனர்.

**அபராதம்**

இதுபோன்று முகக்கவசம் அணியாத பயணிகளுக்கு சிறப்பு குழுக்களை சேர்ந்த வர்கள் ரெயில் பெட்டிக்குள் அதிரடியாக புகுந்து ரூ.200 அபராதம் விதிக்கும் பணியை தொடங்கினர்.

அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் ஒலிபெருக்கி மூலம் கொரோனா விழிப்புணர்வு அறி விப்புகள் இன்று முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது.

இது தொடர்பாக மெட்ரோ நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

**குளிர்சாதன வசதி**

மெட்ரோ ரெயில் பயணம் குளிர்சாதன வசதி கொண்டது என் பதால், பயணிகள் மிகுந்த கவனத் தோடு இருக்க வேண் டும். முகக்கவசம் அணியாமல் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். இதனை மீறி முகக்கவசம் அணியாமலும், ரெயில் பயணத்தின்போது சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமலும் பயணம் செய்பவர்களுக்கு பாரபட்ச மின்றி அபராதம் விதிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**முகக் கவசத்தோடு**

மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் இந்த எச்சரிக்கையால் இன்று பெரும் பாலான பயணி கள் முகக் கவசம் அணிந்தே மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு சென்றனர்., இது போன்று சென்றவர்களில் ரெயில் பய ணத்தின்போது வெகு சிலரே முகக்கவசம் அணியாமல் பயணித் தனர். அவர்களிடம் மட்டுமே அபரா தம் வசூலிக்கப்பட்டது.

இது தவிர அனைத்து பயணி களுக்கும் மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்துக்குள் உடல் வெப்ப பரிசோதனையும் செய்யப்பட்டது.

இதுபோன்ற கொரோனா கட்டுப் பாடுகளால் இன்று மெட்ரோ ரெ யில்களில் கூட்டம் குறைவாகவே காணப்பட்டது.